**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 3/2018 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW - 5 |
| | Defence |
| | Court |
| Name | ரவிக்குமார் |
| Father's Name | ரங்கநாதன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. Eswari, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026.

Signature of Interpreter

<u>முதல் விசாரணை</u>

நான் மாநில குற்ற புனாய்வு துறையில் காவல் துணை காண்காணிப்பாளராக பணிபுரிந்து 30.06.2014 அன்று பணி ஓய்வு பெற்றேன். கடந்த 30.08.2003 அன்று திருப்பெரும்புதூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சுங்குவார்சத்திர காவல் நிலைய குற்ற எண். 198/2003 பிரிவு 399 இதசவின் கீழ் பதியப்பட்ட வழக்கில் மேல் புலன் விசாரணை மேற்கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டும் சாட்சிகள் வேணுகோபால், கணேசன், தலைமை காவலர்கள் ராஜரத்தினம், சுந்தர்ராஜன் மற்றும் தட்சிணாமூர்த்தி, நிலை 1 காவலர் பழனி மற்றும் வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. மணிமாறன் ஆகிய சாட்சிகளை விசாரணை செய்தேன். பின்பு இவ்வழக்கில் என்னுடைய விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரிய வந்த காரணத்தினால் எதிரிகள் மீது இதச பிரிவு 399 மற்றும் 402–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் சாட்சி பட்டியல்களில் 3 முதல் 7 வரையுள்ள சாட்சிகள் ஒரே காவல் நிலையத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை எதுவும் நான் தயார் செய்து தாக்கல் செய்யவில்லை. பார்வை மகஜர் நான் தயார் செய்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை நான் மறு விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. ஏனென்றால் உதவி ஆய்வாளரிடம் சொன்ன அதே விவரங்களை என்னிடம் சொன்ன காரணத்தினால் பதிவு செய்யவில்லை. காவல்துறை புள்ளி விவர கணக்கிற்காக வேண்டி உதவி ஆய்வாளர் தயார் செய்த வழக்கில் நான் சரிவர மேல் விசாரணை

செய்யாமல் எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்